பக்கங்கள் 21+ 03

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 22 புதன்கிழமை 08.10.2025 | அதிர்வு 69

## நீதி அமைச்சின் மேலதிக செயலர் இன்று கைது!



நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ராஜபக்ஷ பதிரகே சேபாலிகா சமன் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இந்தியத் தூதுவர் - சுமந்திரன் கொழும்பில் நேற்று சந்திப்பு!

## அரசியல் நிலைவரம், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி குறித்து முக்கிய பேச்சு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது இரு தரப்புக்கும் இடையே முக்கியமான விடயங்கள் குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டன. 04

# சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசின் கைப்பாவையாக மாற்றாதீர்!

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசின் கைப்பாவையாக மாற்றி, அதன் அதிகாரங்களைப் பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கும் போக்குக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இது தொடர்பில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவிக்கையில்,

“அரசமைப்பின் பக்கம் 126 இல் கூறப்பட்டுள்ளபடி, ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவது, சுயாதீனம், பாரபட்சமற்ற தன்மை மற்றும் செயற்றிறனை வலுப்படுத்தி, அரசியல் மயமாக் 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் 5 ஆவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஐந்தாவது இளங்கலை மாணி ஆய்வு மாநாடு இன்று புதன் கிழமை நடைபெற்றது.

பல்கலைக்கழக கைலாசபதி கலை யரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்ப மாகிய இந்த ஆய்வு மாநாட்டின் முதன்மை விருந்தினராக பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொண்டார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையில் ஆரம்பித்த ஆய்வு மாநாட்டில் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ். சந்திர போஸ் சிறப்புரையை மேற்கொண்டார்.

கலைப்பீடத்தின் இளம் கலைமாணி ஆய்வு மாநாடு கடந்த நான்கு வருடங் களாக நடைபெற்று வந்தது. இம்முறை நடைபெற்ற ஐந்தாவது மாநாடு “வெவ் வேறு துறைகளை இணைத்து மாற் றங்களை வலுவூட்டுவதற்காக அறிவைச் செயற்படுத்துதல்” எனும் தொனிப் பொருளோடு 16 ஆய்வுத் தடங்களில் நடைபெற்றது.

இளங்கலைமாணி பட்டக் கற்கையின் இறுதியாண்டில் மாணவர்கள் நிறைவு றுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இந்த மாநாடு அமைந்தது. அவை ஆய் வுச் சுருக்கங்களாக இந்த ஆய்வு மாநாட்டின் ஆய்வடங்கல் மூலமும் வெளி யிடப்பட்டன.




























# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் உருக்குலைந்த நிலையில் சடலம்!

(பி.கேதீஸ்)

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு நீர் ஏந்திச் செல்லும் கொத்மலை ஓயாவில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் இன்று புதன்கிழமை உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியின் லிந்துலைப் பகுதியில் கொத்மலை ஓயாவில் சடலம் ஒன்று மிதந்து கொண்டிருக்கின்றது என்று பொலிஸாருக்குப் பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்துப் பொலிஸாரால் அந்தச் சடலம் மீட்கப்பட்டது.

நுவரெலியா நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று பரிசோதித்த பின்னர், பிரேத பரிசோதனைக்காகச் சடலம் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறப்பு தடயவியல் வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்து காணப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அர்ப்பணிப்பான சர்வாதிகாரி இலங்கைக்கு மிகவும் அவசியம்



## பீல்ட் மார்ஷல் பொன்சேகா தெரிவிப்பு

இலங்கையை மீட்பதற்கு, நாட்டை நேசிக்கக்கூடிய – அர்ப்பணிப்பான சர்வாதிகாரி அவசியம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“தேசிய மக்கள் சக்தி அரசானது இந்த நாட்டை இதற்கு முன்னர் ஆண்ட அரசுகளை விட ஆயிரம் மடங்கு சிறந்தது என்பதை எனது மனச்சாட்சியின் பிரகாரம் தெரிவிக்க முடியும். குறைந்த பட்சம் ஊழல்வாதிகளைப் பாதுகாக்காமல் இருப்பதற்குரிய முதுகெலும்பு இந்த ஆட்சிக்கு இருக்கின்றது. கடந்த காலங்களில் மோசடிகளில் ஈடுபட்டால் பண பலம் இருந்தால் இலகுவில் தப்பிக்க முடியும். ஆனால், இன்று அதற்கு தடை போடப்பட்டுள்ளது.

சட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றது. நூற்றுக்கு 100 சதவீதம் வெற்றி இல்லை என்ற போதிலும் அதற்குரிய முயற்சியைப் பாராட்ட வேண்டும்.

நாட்டையும், நாட்டு மக்களையும் மேம்படுத்துவதற்குரிய வேலைத்திட்டங்களே எமக்கு அவசியம்.

ஆபிரிக்காவில் மிகவும் ஏழ்மையான நாடாக ருவண்டா இருந்தது. ஆனால், இன்று ஆபிரிக்காவில் சிறந்த நாடாக அது மாறியுள்ளது.

இரட்டை நட்சத்திரம் கொண்ட இராணுவ அதிகாரி ஒருவரே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். நல்ல சர்வாதிகாரம் நாட்டை ஒட்டுமொத்தமாக மாற்றும். அதுதான் ருவாண்டாவில் நடந்தது.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளும் அபிவிருத்தி கண்டுள்ளன. இந்த நாடுகளில் இருந்தும் நாம் அனுபவங்களைப் பெறவேண்டும். அங்கிருந்த தலைவர்கள் நேர்மையுடன் செயற்பட்டனர். சட்டத்தை அமுல்படுத்தினர்.

எனவே, இலங்கை போன்ற வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்க நல்லதொரு சர்வாதிகாரி இருக்க வேண்டும். மஹிந்த போன்ற போலி தேசப்பற்றாளர்கள் நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளுவார்கள்.” – என்றார்.

# தமிழரை ஒற்றையாட்சிக்குள் முடக்கவே 13ஐ அமுலாக்கக் கோருகின்றது தமிழரசு

## கஜேந்திரகுமார் எம். பி. சீற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

"38 வருடம் நடைமுறைப்படுத்தாத 13ஆம் திருத்தத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி தற்போது அமுல்படுத்தக் கோருவது ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்காகவே."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அண்மையில் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த அனைவரும் இணங்கியுள்ளனர் என்று சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். அதற்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர அனைத்து தரப்புகளும் போருக்குப் பிந்தைய காலத்தில் ஒற்றையாட்சிக்குள் உள்ள 13இற்கு இணங்கியிருந்தன. ஒற்றையாட்சிக்குள் முடக்கப்படக்கூடாது – 13ஐ ஆரம்பப்புள்ளியாகக் கொண்டு நகர்த்த முடியாது என்று சொல்லியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறினோம்.




இந்நிலையில், அந்த உண்மையை மூடிமறைக்க நாங்கள் சமஷ்டி கட்சி எனவும், காங்கிரஸ் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டது எனவும் தமிழரசுக் கட்சி கடந்த 16 வருடங்களாக மக்கள் மத்தியில் பொய் பரப்புரை செய்தது.

13ஆம் திருத்தத்தை ஏற்கவில்லை என்ற பொய்யைத் தமிழரசுக் கட்சி தலைவர் தனது அறிவுக்கு ஏற்ற வகையில் – குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியுள்ளார். வழங்கிய காலகட்டம் மிக முக்கியமானது. இரண்டு கிழமைக்கு முன்னராக 2015 – 2019 காலத்தில் செய்யப்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய வரைவு திருத்தி, அதனைப் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் போவதாக தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி பிரதிநிதிகள் சுவிற்சர்லாந்தில் தெரிவித்தனர்.

ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சி வரைவை உருவாக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி பெரும் பங்கு வகித்தது. அந்த வரைவை அமுல்படுத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் சொல்லியிருக்கின்றார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் சொல்லியிருக்கின்றார்.

இவ்வாறான தற்போதைய சூழலில் 13ஐ கொண்டு வந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் சொல்கின்றார் என்றால் ஏக்கிய ராஜ்ஜியவை எதிர்க்காமல் – ஏக்கிய ராஜ்ஜியவை கைவிட்டதாகச் சொலிக் கொண்டு அதேநேரம் ஏக்கிய ராஜ்ஜிய வரும் போது எதிர்க்காமல் விடுவதற்கு யோசிக்கின்றனர். எத்தனையோ வருடங்களுக்குப் பின்னர் தமிழரசுக் கட்சியின் தலைவர் நிரூபித்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்." – என்றார்.

---

### இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அண்மைய அரசியல் மாற்றங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இந்தியத் தூதுவரும் சுமந்திரனும் விரிவாகக் கலந்துரையாடினர்.

விசேடமாக, தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் மற்றும் எதிர்கால நகர்வுகள் தொடர்பிலும் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் இந்தியத் தூதுவர் கேட்ட றிந்தார்.

இந்தியா நிதியளிக்கும் வீடமைப்புத் திட்டங்கள், அகதிகள் மீள்குடியேற்றம் மற்றும் போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள், கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் ஏனைய சமூக மேம்பாட்டுத் துறைகளில் இந்தியா வழங்கும் உதவிகள் குறித்தும், வடக்கு மற்றும் கிழக்கில் சமூக – பொருளாதார மேம்பாட்டுக்கான இந்தியாவின் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

---

### சுயாதீன...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கலுக்கு உட்படுத்தப்படாமல் சிறந்த ஆட்சியை முன்னெடுப்பதற்காகும்.

அரசமைப்பின் 17 ஆவது மற்றும் 19 ஆவது திருத்தங்களின் ஊடாக அதிகாரங்களுக்கிடையிலான தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறைமையினுள், இந்த நாட்டில் பொலிஸ் சேவையை பாரபட்சமின்றியும் சுயாதீனமாகவும் முன்னெடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசின் கைப்பாவையாக மாற்றி, அதன் அதிகாரங்களைப் பொலிஸ்மா அதிபரிடம் கையளிப்பதற்கு எனது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவுக்குள் அரசியல் தலையீடுகள் பிரயோகிக்கப்படுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இந்தச் செயற்பாட்டை அரசு நிறுத்த வேண்டும்." – என்றார்.

---

### நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊழல் மற்றும் நிதி மோசடி குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச காணிக்குரிய நட்டஈடு கொடுப்பனவு தொடர்பாகவே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட அதிகாரிகளின் குழுவினாலும் நட்டஈடு வழங்குவதற்கான அலுவலகத்தின் பணிப்பாளர் சபையினாலும் இந்தச் சொத்துக்கான நட்டஈடு நிராகரிக்கப்பட்டது என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆனால் 2024 ஆம் ஆண்டு சமன் குமாரி, மனோஜி ஹேமலால் ஏகநாயக்கவுக்கு நிதியுதவியை விடுவிப்பதற்கு ஒப்புதல் கோரி, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துக்குக் கடிதம் அனுப்பினார் எனக் கூறப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் முறையான ஒப்புதல் இன்றி இது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதே குற்றச்சாட்டில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அரியாலையில் திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையம் அமைப்புக்கு எதிராகப் போராட்டம்!

## இன்று வீதியை மறித்துப் போராடினர் மக்கள்

**(எஸ். நிதர்ஷன்)**

அரியாலையில் திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையம் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப்பகுதி மக்கள் இன்று (08) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியாலை கிழக்குப் பகுதியில் இன்று புதன்கிழமை காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுச் சில நிமிடங்களில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் போராட்ட இடத்துக்கு வரவேண்டும் என்று கூறி வீதியை வழிமறித்ததால் போக்குவரத்து தடைப்பட்டது.

அதனை அடுத்து, நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் போராட்ட இடத்துக்கு வருகை தந்திருந்தார். அதன் போது தவிசாளரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பின்னர் போராட்டக்காரர்கள் பேரணியாக சென்று ஆளுநர் செயலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

நல்லூர் பிரதேச சபை, எமது ஊர் மக்களுடன் எந்தவகையிலும் கலந்து பேசாது சூழலை மாசுபடுத்தக் கூடிய குப்பைகளை எமது ஊரில் வீசும் திட்டத்தை ஆரம்பித்திருப்பது எமது ஊர் மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியாகும்.

இயற்கைப் பசளை உற்பத்தி என்ற பெயரில் ஏமாற்றுத்தனமாக எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத – மக்காத குப்பைகளை எமது ஊரில் கொட்டி எமது ஊரை குப்பைமேடாக மாற்றும் முயற்சியை நல்லூர் பிரதேச சபை உடனடியாகக் கைவிட வேண்டும்.

எமது இயற்கை வளங்கள் இன்றைய தலைமுறையான எமக்கு மட்டுமானதல்ல, எதிர்கால தலைமறைக்கும் சொந்தமானவையாகும்.

எமது ஊரின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

இதனால் மக்களுக்கும் இயற்கைக்கும் விரோதமான குப்பை மேட்டுத் திட்டத்தைக் கண்டித்தும் அதனைக் கைவிட வேண்டும்.– எனத் தெரிவித்தனர்.











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொலிஸ் துறைக் குழப்பம்

கட்டுமட்டில்லாமல் நிறைவேற்றதிகாரத்திடம் - அரசாங்கத் தரப்பிடம் - ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்காக அரசமைப்பின் 17 ஆவது மற்றும் 19 ஆவது திருத்தங்களின் ஊடாக கொண்டுவரப்பட்டவைதான் சுயாதீன ஆணைக்குழுக்கள்.

அவை அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாடின்றிச் செயல்படும் சுயாதீனமான அமைப்புகள் ஆகும். அவை பொதுநலன் கருதிச் சில முக்கியப் பணிகளைச் செய்யவென, நாட்டின் அரசமைப்பால் அல்லது சட்டங்களாலேயே உருவாக்கப்பட்டவை. அரசமைப்புத் திருத்தங்கள் மூலம் உருவாக்கப்பட்ட இந்த ஆணைக்குழுக்கள், அரசியல் தலையீடுகளைத் தவிர்த்து, வெளிப்படைத் தன்மையுடனும், நடுநிலையுடனும் செயல்பட்டு, அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவும் உதவுகின்றன.

தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, லஞ்சம், ஊழல் போன்றவற்றைத் தடுப்பதற்கான ஆணைக்குழு முதலியவை இத்தகைய வகைக்குள் அடங்கும்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசாங்கம் தனது கைப்பாவையாக மாற்றி, இதுவரை காலமும் அதனிடமிருந்த அதிகாரங்களை பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கச் செய்து, அதன் மூலம் இதுவரையில் சுயாதீனமாகக் கையாளப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள் பலவற்றை நேரடியாக அரசாங்கத் தரப்பினரின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இருப்பதாக எதிர்க்கட்சிகள் இன்று நாடாளுமன்றில் சீற்றம் தெரிவித்திருக்கின்றன.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்குமேற்பட்ட அதிகாரிகளின் இடமாற்றங்கள் மற்றும் விடயங்கள் நேரடியாக சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதற்கு கீழான இடமாற்றங்கள் மட்டுமே நேரடியாக பொலிஸ் மா அதிபரினால் முன்னெடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேற்பட்ட மேலதிகாரிகளின் நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவின் இணக்கத்துடனேயே பொலிஸ்மா அதிபர் அவற்றை முன்னெடுக்க வேண்டும் என்ற சுயாதீனத் தன்மை இது வரையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இப்போது பொலிஸ் ஆணைக் குழுவைத் தம் கைகளில் போட்டுக் கொண்டு, அந்த ஆணைக்குழு மூலமே அந்த அதிகாரத்தை பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கும் ஏற்பாடு இந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. அதன் வாயிலாக தமது கைப்பாவையான பொலிஸ்மா அதிபர் மூலம் பொலிஸ் துறையின் நடவடிக்கைகளைத் தன்னுடைய அரசியல் செயற்பாடுகளுக்கான கட்டமைப்பாக மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் முயலுகின்றது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

கடந்த 25 வருடங்களாக சுயாதீனமாகச் செயற்படும் கட்டமைப்புக்களைத் தகர்க்கும் அரசின் இந்த முயற்சி நிர்வாக சீர்கேடுகளுக்கும், ஆளும் தரப்பின் அத்துமீறிய அட்டகாசங்களுக்கும் வழிவகுக்கப் போகின்றது என்பது நிச்சயம்.





# மன்னார், முல்லைத்தீவு வைத்தியசாலைகளையும் சமச்சீரான சேவைவழங்கலுக்குள் இணையுங்கள்!

## அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸவிடம் வலியுறுத்தினார் ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன் )

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகளை கஷ்ட மருத்துவமனைகள் என்ற பட்டியலில் இருந்து அகற்றி சமச்சீரான சேவை வழங்கலில் இணைக்குமாறும், உள்ளகப்பயிற்சி மருத்துவர் சேவைவசதியை வழங்குமாறும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட விசேட மருத்துவ அதிகாரிகளின் பற்றாக்குறையால் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மருத்துவமனைகளில் உள்ள வெற்றிடங்களை விசேட தர மருத்துவர்களைக் கொண்டு நிரப்ப முடியவில்லை எனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ அனைத்து மாவட்ட பொதுவைத்தியசாலைகளுக்கும் போதுமான அளவு பணியாள் தொகுதி மற்றும் பௌதீக வளங்கள் வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (07) வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பியபோதே இந்த விடயம்தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த நாடாளுமன்ற அமர்விலும் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் பௌதிக வள குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மிகவும் விரைவாக முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவ விடுதி அமைக்கப்படும் என்று சுகாதார அமைச்சரும் பின்னர் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனான சந்திப்பில் இலங்கைக்கான இந்திய தூதர் உறுதியளித்தனர். இந்த உறுதியளிப்புகள் காலந்தாழ்த்தாது செயல்வடிவம் பெறும் என நம்புகிறேன்.

உள்ளக பயிற்சி மருத்துவர்களுக்கான சேவை நிலையங்களாகக் கடந்த சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த தீவில் உள்ள 23 மாவட்டங்களைச் சார்பாக்கும் 64 மருத்துவமனைகள் பட்டியலிடப்பட்டிருந்தன.

28 ஆதார வைத்தியசாலைகளில் கூட, காணப்படும் இவ்வசதி நாட்டின் 24 ஆவது 25 ஆவது மாவட்டங்களாக உள்ள மன்னாரிலும் முல்லைத்தீவிலும் இல்லை என்பது இந்த நாட்டின் மருத்துவ சேவை வழங்கலில் மேற்படி இரு மாவட்டங்களும் மிகவும் சமச்சீராக அணுகப்படவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

முல்லைத்தீவில் 21 மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். ஒரு நிரந்தர மருத்துவ நிபுணர்கூட இல்லை. மருந்துக்கலவையாளர்கள் 23 பேர் இல்லை. தாதிய உத்தியோகத்தர் 13 பேர் இல்லை. 2025.07.21ஆம் திகதிய விவரங்களின்படி இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆளணி வெற்றிடம் முல்லைத்தீவு பிராந்திய மருத்துவ சேவை வழங்கலில் இருப்பதும் சமச்சீரற்ற சேவை வழங்கலின் சான்றே.

எப்போது அல்லது எப்போதிருந்து எங்களையும் உங்களில் ஒருவராக நீங்கள் காணும் உலகத்தை நாங்களும் காணத்தக்கவர்களாக, நீங்கள் பெறும் மருத்துவ வசதியின் தரத்தை நாங்களும் பெறக்கூடியவர்களாக, எங்கள் மன்னாரையும் முல்லைத்தீவையும் கஷ்ட மருத்துவமனைகள் என்ற பட்டியலில் இருந்து அகற்றி சமச்சீரான சேவை வழங்கலில் இணைப்பீர்களா? உள்ளகப் பயிற்சி வழங்கல் வசதியை வழங்குவீர்களா.- என்றார்.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இதற்குப் பதிலளிக்கையில்,

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு பயிற்சி மருத்துவர்கள் அனுப்பப்படுவதில்லை.

ஏனெனில் இலங்கை மருத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு மட்டுமே பயிற்சிக்காக பயிற்சி மருத்துவர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். மன்னார் மற்றும் முல்லைத்தீவு மருத்துவமனைகள் இன்னும் மருத்துவ சபையால் அங்கீகரிக்கப்படவில்லை.

இதற்குக் காரணம், மருத்துவ சபையின் அளவுகோல்களின் படி medicine, surgery, gynecology, pediatrics என்று நான்கு துறைகளுக்கும் விசேட வைத்தியர்கள், சபைத் தராதரம் மிக்க வைத்திய நிபுணர்கள் இருந்தால்தான் பயிற்சி மருத்துவர்களைப் பெறமுடியும். நாம் பயிற்சி மருத்துவர்களை அனுப்புவதற்கு எங்களுக்கு விருப்பம்தான். பயிற்சி மருத்துவர்களை அனுப்ப முடிந்தால் அந்த மருத்துவ பற்றாக்குறைக்கு விடை கண்டறியப்படும்.

இருப்பினும் இங்கே முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் மருத்துப் பயிற்சி அளிக்கும் இரண்டு சபைத்தராதரம் மிக்க மருத்துவ நிபுணர்கள் உள்ளனர். சிறப்பு மருத்துவ சேவைகளை வழங்கும் பதினான்கு மருத்துவர்கள் இருந்தாலும் இரண்டு சபைத் தராதரம் மிக்க மருத்துவ நிபுணர்கள் உள்ளனர்.

மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட விசேட மருத்துவ அதிகாரிகளின் பற்றாக்குறையால் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மருத்துவமனைகளில் உள்ள வெற்றிடங்களை விசேட தர மருத்துவர்களைக் கொண்டு நிரப்ப முடியவில்லை.

இருப்பினும் ஏற்கனவே வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற மற்றும் அதைப் பெறவிருக்கும் தகுதி வாய்ந்த மருத்துவர்கள், மருத்துவ சபையில் பதிவுசெய்ய தகுதி உடையவர்கள் இந்த மருத்துவமனையில் சிறப்பு மருத்துவசேவைகளைப் பெற நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனது முந்தைய பதிலில் நான் கூறியது போல் வெளிநாட்டுப் பயிற்சிக்குச் சென்ற, ஆனால் மருத்துவ சபையால் சான்றளிப்பைப் பெறாத மருத்துவர்களால் எமது சிறப்பு மருத்துவ சேவைகள்

தொடர்ச்சி▼

# மன்னார், முல்லைத்தீவு வைத்தியசாலைகளையும் சமச்சீரான சேவைவழங்கலுக்குள் இணையுங்கள்!

தொடர்ச்சி▲

வழங்கப்படுகின்றன. மறுபுறம் வெளி நாடுகளில் சிறப்புப் பயிற்சிக்கென செல்லப் போகிறவர்களிடம் இருந்துதான் இந்தச் சேவையை நாங்கள் பெறுகிறோம்.

எனவே இலங்கைக்கு வரும் செல்லும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் சபைத்தரம் பெற்றவர்களின் எண்ணிக் கைக்கு ஏற்பவே நாங்கள் சேவையை வழங்குகிறோம்.

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ பரிசோதனை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருப்பினும் மேலும் தேவையான விசேட மருத்துவப் பரிசோதனைகளுக்கும், தனித்துவமான இரசாயன பரிசோதனைக ளுக்கும் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவகையில் யாழ்ப்பாணம் மருத் துவமனை, வவுனியா மருத்துவமனை, அநுராதபுரம் மருத்துவமனை, சில சந்தர்ப்பங்களில் கண்டி மற்றும் கொழும்பு தேசிய மருத்துவமனைகளுக்கும் நோயா ளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

அனைத்துப் பரிசோதனைகளையும், அனைத்து மருத்துவமனைகளுக்கும் வழங்கமுடியாத நிலை காணப்படு கின்றது.

இந்த நிலையில் அனைத்து மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கும் போது மான அளவு பணியாள் தொகுதி மற்றும் பௌதீக வளங்கள் வழங்குவதற்கு முடி வெடுக்கப்பட்டிருக்கின்றது.

அரச நிதிமூலமாகவும், அன்பளிப் புக்கள் ஊடாகவும் மாங்குளம், கிளி நொச்சி பருத்தித்துறை, யாழ்ப்பாணம் மருத்துவமனைகளை மேம்படுத்த வேதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தேவையான மனிதவளங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், பணியாளர் களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உங்களுக்கு எங்களுக்கு என்று ஒன்றில்லை. நாட்டின் ஒவ்வொரு குடி மகனுக்கும் உகந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கான வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். எனவே நாங்கள் அதை நோக்கியே செயற் படுகிறோம்.

மாவட்ட பொது மருத்துவமனைகளின் வளர்ச்சியும் அவை மாவட்ட பொது மருத்துவமனைகளாக மாற்றமடைந்ததும் வெவ்வேறு காலப்பகுதிகளில் நடந்தவை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

அதனால் அவை அபிவிருத்தியில் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன. முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைகள் இன்னும் மாகாண சபைகளின் கீழ் உள்ளன. அவை நிரல் அமைச்சின் கீழ் அல்ல. மாகாண சபை கள் என்றில்லை. அனைத்து மருத்து வமனைகளுக்கும் நாங்கள் ஊழியர் களை வழங்குகிறோம். – என்றார்.

# தமிழருக்கு 13 ஐ வழங்குவோம் என்றவர்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லை!

## மொட்டுக் கட்சி எம்.பி. நாமல் சுட்டிக்காட்டு

தமிழர்களுக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தை வழங் குவோம் என்று கூறியவர்கள், மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித் ததாவது:–

“போரை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கிலும் மாகாண சபைத் தேர்தலை மஹிந்த ராஜபக்ஷ நடத்தி இருந்தார். ஆனால் அவருக்குப் பிறகு வந்த ஜனாதிபதிகளால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளது. இது வெட்கக் கேடான விடயமாகும்.

அதிகாரத்துக்காக கொள்கையைக் கைவிடும் கட்சி அல்ல எமது கட்சி. தேர்தலில் வென்றாலும், தோற்றாலும் கொள் கைகளை கைவிட்டது கிடையாது. சில கட்சிகள் தேர்தல் வெற்றிக்காக தமது கொள்கையை மாற்றுகின்றன. அதேபோல பொய்களையும் கூறுகின்றன. இப்படியான கட்சிகளுக்கு அழிவு நிச்சயம்.

செய்யக்கூடிய விடயங்களை மட்டுமே எமது கட்சி கூறி வருகின்றது. 13ஆவது திருத்தத்தைத் தருகின்றோம், அதைத்



தருகின்றோம், இதைத் தருகின்றோம் என எம்மாலும் கூறி இருக்க முடியும். ஆனால், நாங்கள் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. 13ஆவது திருத்தத்தைத் தருவோம் என்று கூறியவர்களால், வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த இயலவில்லை.” – என்றார்.

# வந்தாறுமூலையில் கடற்படையின் கனகர வாகனம் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயம்; சாரதி கைது!

(கனகராசா சரவணன்)

வாழைச்சேனையில் இருந்து ஏறாவூர் நோக்கி பிரயாணித்த கடற்படை கனகர வாகனம் வந்தாறுமூலை கிழக்கு பல் கலைக்கழகத்திற்கு அருகில், நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணிய ளவில் வீதியால் சென்ற பாதசாரி ஒருவர் மீதுமோதிய விபத்தில் பாதசாரி படுகா யமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

வாகன சாரதியான கடற்படை வீரரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும் சம்பந்தப்பட்ட வாகனத்தைத் தடுத்து வைத்துள்ளனர் எனவும் ஏறாவூர் பொலி ஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த பாதசாரி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தீவிர சிகிச் சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வாகன சாரதியான கடற்படை வீரரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை ஏறாவூர் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.








# இளங்கோவன் தம்பதியரின் 5 நூல்கள் வெளியீடு

பாரிஸில் வாழும் வி.ரி. இளங்கோவன் – பத்மா இளங்கோவன் ஆகியோரின் ஐந்து நூல்கள் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள 'எங்கட புத்தகங்கள் இல்லத்தின்' கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையுரையையும் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் வாழ்த்துரையையும், இளம் ஆய்வாளர்கள் ச.சத்தியதேவன், சின்னராஜா விமலன், மாதவி உமா சுத சர்மா ஆகியோர் நூல் விமர்சன உரைகளையும், வடக்கு- கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள், கலாநிதி நடேசு இரவீந்திரன், கருணா கரன் சிவராஜா ஆகியோர் கருத்துரைகளையும் நூலாசிரியர்கள் நன்றியுரைகளையும் நிகழ்த்துகின்றமையையும் காணலாம்.















# சாய்ந்தமருது பிரதேச செயலக சிறுவர், முதியோர் தின நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கி சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சிறுவர், முதியோர் தினக் கொண்டாட்டம் கடந்த வியாழக்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சர்வதேச சிறுவர் தினம் "அன்பால் போஷியுங்கள் – உலகை வழிநடத்துங்கள்" எனும் தொனிப்பொருளில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜஃபர் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். முஹம்மது ஆஷிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாக என்.எஸ் இன்ஜினியரிங் முகாமைத்துவ பணிப்பாளர் பொறியியலாளர் எம்.யூ.எம். நியாஸ், கௌரவ அதிதிகளாக சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிகா, சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், திட்ட முகாமையாளர் எஸ். றிபாயா, வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ். ஹிதாயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலய உதவியாளர் எம்.எஸ்.எம். நௌஷாத், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் களான எம்.ஆர்.எஸ். ஷாமிலா, ஏ.எம்.அபுல் ஹுதா, எம். எம். ஜாபிர், எம்.ஐ.அன்சார், ஜே.எம். றம்சா, ஏ.கணேசமூர்த்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எப். றிகாஸா ஷர்பீன், எம்.ஐ.சர்பீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சிறுவர்களின் நடனங்கள், கதை கூறல், பாடல்கள், முதியோர்களின் நாட்டார் பாடல், கவிதை என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களுக்கும் முதியோருக்கும் நினைவுச் சின்னங்கள், பரிசில்கள் வழங்கப்பட்டன.



# புத்தளம், கற்பிட்டி பகுதிகளை உள்ளடக்கி 07 கடற்கரை பூங்காக்கள் நிறுவத் திட்டம்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

நாடு முழுவதும் 100 சிறிய கடற்கரை பூங்காக்களை நிறுவும் திட்டத்துக்கு ஏற்ப புத்தளம் மாவட்டத்தில் 07 கடற்கரை பூங்காக்களை நிறுவ கடலோர பாதுகாப்புத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் முதல் சிறிய கடற்கரை பூங்காவுக்கான அடிக்கல் நாட்டு விழா மாரவில குருசா தேவாலயத்துக்கு அருகில் சுற்றுச் சூழல் பிரதி அமைச்சர் அன்டன் ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்றது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜனக, ஹிருணி விஜேசிங்க, மற்றும் நாட்டாண்டியா பிரதேச சபைத் தலைவர் சாகர விஜேசேகர ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் மாரவில, சிலாபம், புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதிகளில் 07 கடற்கரை பூங்காக்கள் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துடன் இணைந்து செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.





# மக்கள் தந்த ஆணைக்கு மதிப்பளித்து முத்து நகர் காணிகளை விடுவியுங்கள்!

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அரசிடம் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர் )

அன்று ஒரு கதையும், இன்று ஒரு கதையும் கூறும் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை அரசியல்வாதிகள், மக்களை ஏமாற்றும் வேலைகளையே செய்கின்றனர்.

கடந்த காலங்களில் மக்களுடன் இணைந்து போராடியபோது கண்களை மூடிக் கொண்டா அவர் மக்களுடன் இணைந்து போராடினார். கடந்த காலங்களில் 04 முஸ்லிம் எம்.பிக்கள் அந்த மாவட்டத்தில் உச்ச அதிகாரத்தில் இருந்த காலத்தில் இந்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும். அவர்கள் விட்ட பிழையே மக்கள் இன்று கஷ்டப்பட காரணம். முழுப் பலமிக்க இந்த அரசு முத்து நகர் காணிகளை மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும்.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், கொழும்பு மாநகர உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் முத்து நகர் காணி மீட்பு போராட்டகாரர்களுக்கு ஆதரவளித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முத்து நகர் காணிகள் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்டது. வேறு வேறு பிரதேசங்களில் இருந்து வந்து இந்த காணிகளில் மக்கள் காலகாலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனாலும் அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 1984 ஆம் ஆண்டு துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானது என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அந்த காலப் பகுதியில் திருகோணமலை மாவட்ட 11 கிராம நிலதாரி பிரிவுகளைச் சேர்ந்த காணிகள் துறைமுக அதிகார சபைக்கு இதன் மூலம் சொந்தமாக்கப்பட்டுள்ளது. இப்படி இருந்த போதிலும் 1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து இந்த முத்து நகர் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு விவசாய திணைக்களம் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி அவர்களின் விவசாய நடவடிக்கையை



மேம்படுத்த தேவையான சகல வசதிகளையும், சலுகைகளையும் செய்து கொடுத்துள்ளார்கள்.

கடந்த அரசுகள் விட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டியே இந்த அரசு மக்கள் ஆணையை பெற்றது. அதன் தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்ட அதிக முஸ்லிம் பிரதேசங்கள் முதன்முறையாக தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கினர். எனினும் துரதிஷ்டவசமாக அமைச்சரவை அமைச்சர் ஒருவர் முஸ்லிங்களுக்கு கிடைக்காமையால் அதனால் விரக்தியுற்ற மக்கள் இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய ஆணையை குறைத்து கொண்டார்கள். இந்த நிலைக்கு மக்களை தள்ளியதும், இந்த பிரச்சினையை முஸ்லிம் அரசியல்வாதிகள் கையிலெடுக்க காரணமும் அரசின் போக்கே தவிர வேறில்லை.

கடந்த காலங்களில் இந்த மக்களின் முத்து நகர் காணிகள் பிரச்சினைக்காக மக்களுடன் இணைந்து அதிகாரம் கிடைக்க முன்னர் போராடிய தேசிய மக்கள் சக்தியின் இன்றைய அரசியல்வாதிகள் அதிகாரம் கிடைத்த பின்னர் தடுமாறுகிறார்கள். இன்று தடுமாறும் இவர்கள் ஏன் அன்று மக்களுடன் இணைந்து போராடினார்கள் என்று கேட்க விரும்புகிறேன். 3:2 பெரும்பான்மையை கொண்ட நாடாளுமன்றத்தையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் கொண்டுள்ள இந்த அரசு விவசாயம் செய்து வரும் முத்து நகர் காணிகளை மக்களுக்கு கொடுக்க விரும்பினால் கொடுக்கலாம். இதனை விவாத பொருளாக வைத்து கொண்டிராமல் மக்களின் பிரச்சினையை தீர்க்க அரசு உடனடியாக முன்வர வேண்டும்.

சட்டவிரோத காணி என இப்போது கூறும் அரசு தேர்தலுக்கு முன்னர் அதிகாரம் கிடைக்க முன்னர் முஸ்லிம் மக்களுடன் இணைந்து இந்த காணியை மீட்க போராடியது ஏன்? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அன்று ஒரு கதையும், இன்று ஒரு கதையும் கூறும் தேசிய மக்கள் சக்தி திருகோணமலை அரசியல்வாதி மக்களை ஏமாற்றும் வேலைகளையே செய்கிறார். கடந்த காலங்களில் போராடியபோது கண்களை மூடிக்கொண்டா அவர் மக்களுடன் இணைந்து போராடினார். கடந்த காலங்களில் 04 முஸ்லிம் எம்.பிக்கள் அந்த மாவட்டத்தில் உச்ச அதிகாரத்தில் இருந்த காலத்தில் இந்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும். அவர்கள் விட்ட பிழையே மக்கள் இன்று கஷ்டப்பட காரணம்.

கடந்த கால ஏமாற்று அரசியல்வாதிகளை நிராகரித்தே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை வழங்கினார்கள். அவர்களே மக்களை வீதிக்கு வரவழைப்பது நியாயமில்லை. நாட்டையும், நாட்டு வளங்களையும் பாதுகாப்பதில் எப்போதும் அர்ப்பணிப்பு மிக்க சமூகமான முஸ்லிம் சமூகம் இருந்து வந்துள்ளது. கடந்த காலங்களில் ஆயுதமேந்தியவர்களுக்கு பயந்து அரசு ஒருதலை பட்சமாக நடப்பது முஸ்லிம் சமூகத்தை வேதனைக்கு உட்படுத்தியுள்ளது. முஸ்லிங்கள் வாழ்ந்த காணிகள் கூட இன்று காடாக அங்கு மாறியிருக்கிறது. அந்த காணிகளையும் கூட அரசு விடுவிக்க முன்வர வேண்டும்.

ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் மீது அரச படைகளை கொண்டு அராஜகத்தை கட்டவிழ்த்து விடும் அரசு அந்த மக்கள் விவசாய நடவடிக்கைகளை செய்ய விடாமல் குளங்களையும், விவசாய கிணறுகளையும் மூடி வருகிறார்கள். விவசாய நடவடிக்கை இடம்பெற்ற தடயங்கள் கூட அழிக்கப்பட்டு வருகிறது. இவற்றை முழுமையாக நோக்கும் போது சர்வதேச அஜந்தாக்களுக்கு முத்து நகர் மக்கள் பலியாக்கப்படுகிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. இந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும். அவர்கள் யுத்தத்தால் இழந்த காணிகளையும் மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.– என்றார்.



# கைதடி முதியோரை மகிழ்விக்கும் நோக்கில் சாதனையை நிகழ்திக் காட்டிய திருச்செல்வம்!

பல்வேறு சாதனைகளைப் புரிந்து வரும் மட்டுவிலைச் சேர்ந்த செல்லையா திருச்செல்வம் (வயது – 61) என்பவர் முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி முதியோர் இல்லத்தில் தனது சாதனை ஒன்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை (06) கைதடி முதியோர் இல்லத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இவர் தனது இரு காதுகளையும் பயன்படுத்தி பட்டா ராக வாகனம் ஒன்றை இழுத்துக் காட்டி முதியோர்களை மகிழ்வித்துள்ளார். தனது இரண்டு காதுகளையும் பயன் படுத்தி இந்த வாகனத்தைத் திருச்செல்வம் இழுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதியோர் வாரத்தில் முதியோரை மகிழ்விக்கும் ஒரு செயற்பாடாகவே தான் இதனைச் செய்துள்ளார் என்றும் இதில் எந்தவிதமான இலாப நோக்கமும் இல்லை என்றும் சாதனையாளர் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.










# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இந்து சமய தொண்டர்சபை!

(த.சுபேசன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் உயர் திருவிழாக்களான சப்பறம், தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்களில் ஒழுங்கமைப்பு, பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் முதலுதவி ஆகிய பணிகளை இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர்சபையின் தொண்டர்கள் வழங்கியிருந்தனர்.




# தேசிய ஓய்வூதியர் தினத்தில் மருத்துவ முகாம்!





(த.சுபேசன்)

ஓய்வூதியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் ஓய்வூதியர்களுக்கான மருத்துவ முகாம் இடம்பெற்றது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் எவ்.சி. சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாம் நிகழ்வில் வைத்தியர் காண்டீபனால் ஓய்வூதியர்களுக்கான மருத்துவ பரிசோதனையும், சுதேச மருத்துவர் வைத்தியர் தயாழினியால் உடல் ஆரோக்கியத்துக்கு யோகாவின் பயன்பாடு பற்றிய கருத்துரையும் வழங்கப்பட்டன.




# யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவரும் வன்முறையற்ற ஆயுதம்!

முரண்பாடு (Conflict) என்பது இயற்கையானது, தவிர்க்க முடியாதது. ஆனால், அதை நாம் கையாளும் முறையே அதன் விளைவுகளைத் தீர்மானிக்கிறது. மோதலை ஒரு எதிர்மறை விஷயமாக மட்டுமே பார்ப்பது தவறு. மோதல் என்பது ஒரு தீ போன்றது – அதை ஆக்கபூர்வமான வழியில் பயன்படுத்தலாம் அல்லது அழிவுக்கு வழிவகுக்கலாம்.உண்மையில், மோதல் பல நேர்மறையான அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒரு தனிநபர் அல்லது சமூக மட்டத்தில், மோதல்கள் புதிய சிந்தனைகளுக்கும், மேம்பாடுகளுக்கும், பிரச்சி னைக்கான ஆழமான தீர்வுகளுக்கும் வழிவகுக்கலாம். சமூக மட்டத்தில், மோதல்கள் சமூக அநீதிகளை வெளிச் சத்துக்குக் கொண்டு வரலாம். உதாரணமாக, வரலாற்று ரீதியாக தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டங்கள் அல்லது சிவில் உரிமைகள், இயக்கங்கள் போன்றவை மோதல்களின் விளைவாகவே உருவானவை. இந்தப் போராட்டங்கள், சமூகத்தில் இருந்த சமத்துவமின்மையை வெளிப்படுத்தி, புதிய சட்டங்களுக்கும், சிறந்த வாழ்க்கை நிலைமைகளுக்கும் வழிவகுத்தன.

மோதலை நாம் கையாளும் விதமே அதன் பலன் களைத் தீர்மானிக்கிறது. மோதலை வன்முறையாகக் கையாளும்போது, அது பேரழிவு, மரணம் மற்றும் சமூகப் பிளவுகளுக்கு வழிவகுக்கிறது. உலகப் போர்கள், இனப்படுகொலைகள், மற்றும் தற்போது உலகின் பல பிராந்தியங்களில் நடந்து வரும் யுத்தங்கள் போன்றவை மோதல்களை வன்முறையாகக் கையாண்டதற்கான உதாரணங்கள்.

இவை பெரும்பாலும் உள்நாட்டுப் போர்களாகவோ அல்லது இரு நாடுகளுக்கு இடையேயான மோதல்க ளாகவோ இருக்கின்றன. இந்த மோதல்களின் விளை வாக ஏராளமான மனித இழப்புகள், இடம்பெயர்வுகள், மற்றும் பொருளாதார சீர்குலைவுகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது நடைபெற்றுவரும் சில முக்கியமான யுத்தங்களாக ரஷ்யா – உக்ரைன் போர், சூடான் உள் நாட்டுப் போர், இஸ்ரேல்–ஹமாஸ் போர் (காசா முரண் பாடு), எத்தியோப்பியன் உள்நாட்டுப் போர், யேமன் உள்நாட்டுப் போர் என்பன உள்ளன. இலங்கையின் கடந்த கால உள்நாட்டுப் போரின் எதிர்மறை விளைவுகள் இன்றுவரை நாட்டில் உயிரோட்டமாக உள்ளன. இந்த முரண்பாடுகளை நேர்மறையாக தீர்க்க செவ்விந்தி யர்களின் மோதல் தீர்வு முறையை பயன்படுத்தலாம்.

செவ்விந்தியர்களின் பாரம்பரிய மோதல் தீர்வு முறைகளில் “சமாதான வட்டம்” (Peace Circle) என்பது மிகவும் முக்கியமானதாகும். பாரம்பரிய செவ்விந்திய சமூகங்களில், தனிநபர் மோதல்கள் சமூகத்தின் ஒட்டுமொத்த நல்லிணக்கத்துக்கும் ஒரு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. நீதி என்பது பழிவாங்குவது அல்ல, மாறாக சமநிலையை மீட்டெடுப்பது. இந்த தத்துவத்தின் அடிப்படையில் உருவானதுதான் சமாதான வட்டம். இது நூற்றாண்டுகளாக வாய்வழியாகப் பரவி, சமூக நல்லிணக்கத்தை நிலைநிறுத்தும் ஒரு முக்கிய கருவி யாக செயல்பட்டு வருகிறது. இந்த வட்டம் தொடர்பில் ஒரு வாய்வழிக் கதை உண்டு. செவ்விந்தியர்கள் காடுகளில் வசிக்கும் போது முரண்பாடுகளை தீர்க்க ஒரு இடத்தில் ஒன்று கூடுவர். அவ்விடத்திற்கு தாங்கள் வரும் வழியில் இருக்கும் இயற்கையான பொருள்களைக் கைகளில் எடுத்து வருவர். ஒரு இடத்தில் ஒன்று கூடுவர். அந்த பொருள்களை வைத்து அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு ஆக்கத்தை உருவாக்குவர். அந்த ஆக் கத்தை மத்தியில் வைத்து வட்டமாக அமர்ந்து முரண்பாடு தொடர்பில் கலந்துரையாடுவர். அதில் பேசும் பொருள் என்ற ஒரு பொருளை நிர்ணயித்து அந்தப் பொருளை வைத்திருக்கும் நபர் மாத்திரமே பேசுவார். இந்த வட்டத் தின் மையப் பகுதி பல முக்கியமான விஷயங்க ளைக் குறிக்கிறது. இந்த வட்டம், சமூகம், மனிதர்கள், இயற் கையுடன் உள்ள தொடர் உறவுகளைக் குறிக்கிறது. இங்கு யாரும் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் அல்ல. அனைவரும் சமமாகவே கருதப்படுகிறார்கள். இந்த வட்டம், அனைத்து உயிரினங்களும் ஒன்றோ டொன்று தொடர்புடையவை என்ற தத்துவத்தை மைய மாகக் கொண்டது. எல்லோரது முகமும் எல்லோ ருக்கும் தெரிவதற்காகவே வட்ட வடிவில் அமருகிறார்கள்.



மோதல் தீர்க்கும் அமர்வின்போது, இந்த வட்டத்தின் மையத்தில் ஒரு “பேசும் பொருள்” (talking piece) வைக்கப்படும். பொதுவாக, ஒரு இறகு, கல் அல்லது செவ்விந்தியர்களின் கலாச்சாரத்தின் பாரம்பரியமான பொருள் இதில் பயன்படுத்தப்படும். இந்த பொருள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு கடத்தப்படும். யார் கையில் இந்த பொருள் உள்ளதோ, அவர்கள் மட்டுமே பேச முடியும், மற்றவர்கள் அமைதியாகக் கேட்க வேண்டும். இது அமைதியையும், அனைவருக்கும் பேசும் வாய்ப்பையும் உறுதி செய்கிறது.

மனித சமூகத்தில் ஏற்படும் முரண்பாடுகளை தீர்க்கும் முறைகள் ஒவ்வொரு சமூகத்தின் கலாச்சாரம் மற்றும் தத்துவத்தின் அடிப்படையில் வேறுபடுகின்றன. செவ் விந்தியர்களின் இந்த மோதல் தீர்வு முறை, ஒரு தனித்துவமான மற்றும் ஆழமான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இது வெறும் சட்டப்பூர்வமான தண்டனைகளை வழங்குவதை விட, பாதிக்கப்பட்டவர், குற்றவாளி மற்றும் சமூகத்தின் முழுமையான குணப் படுத்துதலை (healing) நோக்கமாகக் கொண்டுள்ளது.

### சமாதான வட்டத்தின் செயல்முறைகள்

வட்டத்தை அமைத்தல் – இந்த செயல்முறை தொடங் குவதற்கு முன், ஒரு பாதுகாப்பான மற்றும் புனிதமான இடம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அங்கு மத்தியவட்டத்தை அமைக்கின்றனர். அதனை மத்தியில் வைத்து அனை வரும் ஒரு வட்ட வடிவில் அமர்ந்து கொள்கின்றனர். இந்த வட்டம், சமத்துவம், முழுமை மற்றும் ஒன்றோ டொன்று தொடர்புடைய வாழ்வைக் குறிக்கிறது. இங்கு யாரும் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் இல்லை.

வட்டத்தை திறத்தல் (Opening the Circle) – ஒரு மூத்த தலைவர் அல்லது வழிகாட்டி வட்டத்தைத் திறந்து, அதன் புனிதத்தன்மை மற்றும் நோக்கம் குறித்து விளக்குவார். இது ஒரு பிரார்த்தனை அல்லது பாரம்பரிய சடங்குகளுடன் தொடங்கலாம். இது பங்கேற்பாளர்கள் அனைவரும் மரியாதையுடனும், திறந்த மனதுடனும் கலந்துகொள்வதை உறுதி செய்கிறது.

பேசும் பொருளைப் பயன்படுத்துதல் (Using a

தொடர்ச்சி▼

# யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவரும் வன்முறையற்ற ஆயுதம்!

தொடர்ச்சி▲

Talking Piece): ,து சமாதான வட்டத்தின் மிக முக்கியமான அம்சமாகும். ஒரு இறகு, கல், அல்லது மரத் துண்டு போன்ற ஒரு பாரம்பரிய பொருள்

பேசும் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பொருள் யார் கையில் உள்ளதோ, அவர்கள் மட்டுமே பேச முடியும், மற்றவர்கள் முழு அமைதியுடன் கேட்க வேண்டும். இது ஒவ்வொருவருக்கும் பேசும் வாய்ப்பை சமமாக அளிக்கிறது, குறுக்கீடுகள் தவிர்க்கப்படுகின்றன.

கதைகளைப் பகிர்தல் (Sharing Stories) – பேசும் பொருள் கைமாறும்போது, பாதிக்கப்பட்டவர், குற்றவாளி மற்றும் சமூக உறுப்பினர்கள் தங்கள் கதைகள், உணர்வுகள் மற்றும் மோதல் தங்களுக்குள் ஏற்படுத்திய தாக்கம் குறித்து பகிர்ந்து கொள்கின்றனர். இது ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும், பச்சாதாபத்தை வளர்க்கவும் உதவுகிறது.

தீர்மானத்தை எட்டுதல் (Reaching a Resolution)– அனைத்துக் கதைகளையும் கேட்ட பிறகு, சமூகம் ஒன்றாக இணைந்து ஒரு தீர்மானத்தை எட்ட முயற்சிக்கும். இந்தத் தீர்மானம் தண்டனையை மையமாகக் கொண்டதல்ல, மாறாக மோதலால் ஏற்பட்ட சேதத்தைச் சரிசெய்வதையும், குற்றவாளி சமூகத்துக்கு எப்படி உதவ முடியும் என்பதையும் மையமாகக் கொண்டது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வது, பொதுச் சேவைகளில் ஈடுபடுவது அல்லது சமூகக் கூட்டங்களில் பங்கேற்பது போன்றவையாக இருக்கலாம்.

வட்டத்தை மூடுதல் (Closing the Circle) – ஒரு தீர்மானம் எட்டப்பட்ட பிறகு, வழிகாட்டி அல்லது மூத்தவர் வட்டத்தை மூடி வைப்பார். இது, இந்த செயல்முறை நிறைவடைந்தது என்பதையும், அனைவரும் மீண்டும் சமூகத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் குறிக்கிறது.

### சமாதான வட்டத்தின் பண்புகள்

சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் – வட்ட வடிவம் அனைவரும் சமம் என்பதை வலியுறுத்துகிறது. பாதிக்கப்பட்டவர், குற்றவாளி, சமூக உறுப்பினர்கள் என அனைவரும் ஒரே நிலையில் அமர்கின்றனர். ,து அனைவரும் பங்கேற்கவும், தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும் ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்குகிறது.

குணப்படுத்துதலை மையமாகக் கொண்டது– இந்த முறை பழிவாங்குவதை விட, குணப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டது. குற்றவாளியின் செயல் ஏன் நடந்தது என்பதற்கான காரணங்களைப் புரிந்து கொள்வது, பாதிக்கப்பட்டவரின் வலியை அங்கீகரிப்பது மற்றும் சமூகத்தில் ஏற்பட்ட விரிசலை சரிசெய்வது ஆகியவை இதன் மையக் கருவாகும்.

சமூகத்தின் ஈடுபாடு – சமாதான வட்டம் தனிநபர்களுக்கு இடையிலான மோதலை ஒரு சமூகப் பிரச்சினையாகப் பார்க்கிறது. மோதல் தீர்வு என்பது தனிநபர்களின் பொறுப்பு மட்டுமல்ல, சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு. இது சமூகப் பிணைப்புகளை வலுப்படுத்துகிறது.

மரியாதை – பேசும் பொருளைப் பயன்படுத்துவது, ஒவ்வொருவருக்கும் பேசும் உரிமையையும், மற்றவர்களுக்குக் கேட்கும் கடமையையும் கற்றுக்கொடுக்கிறது. இது மரியாதை, பொறுமை மற்றும் பரஸ்பர புரிதலை வளர்க்கிறது.

### விளைவுகள் மற்றும் இன்றைய பயன்பாடு

செவ்விந்தியர்களின் சமாதான வட்டம் முறை, அதன் நேர்மறையான விளைவுகள் காரணமாக இன்று பல நவீன சமூகங்களால் பின்பற்றப்படுகிறது. இந்த முறையின் முக்கிய விளைவுகள்:

சமூக பிணைப்புகளை வலுப்படுத்துதல் – இது சமூக உறுப்பினர்களுக்குள் நல்லுறவை மேம்படுத்துகிறது.

குற்றவாளிகளுக்குப் பொறுப்புணர்வு – குற்றவாளிகள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்கவும், நேர்மறையான மாற்றங்களைச் செய்யவும் தூண்டப்படுகிறார்கள்.

குறைந்த மறு – குற்றம் – ஆய்வுகளின்படி, இந்த முறையைப் பின்பற்றிய சமூகங்களில் மறு–குற்ற விகிதம் குறைவாக உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் முழுமையான நல்வாழ்வு – இது பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவும், தீர்மானத்தில் பங்கெடுக்கவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

முடிவாக, செவ்விந்தியர்களின் சமாதான வட்டம் மனிதர்கள் மற்றும் அவர்களின் உறவுகளின் அடிப்படையில் அமைந்த ஒரு சக்திவாய்ந்த மோதல் தீர்வு முறையாகும். இது பழிவாங்கும் நீதியை விட குணப்படுத்துதலையும், தண்டனையை விட பொறுப்புணர்வையும் முதன்மைப்படுத்துகிறது. இதன் தத்துவமும், செயல்முறைகளும் இன்றைய உலகின் மோதல்களையும், சமூகப் பிளவுகளையும் தீர்க்க ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

குணப்படுத்தும் அணுகுமுறை (Healing-Centered Approach) – தற்கால மோதல்கள் பெரும்பாலும் ஆழமான உணர்ச்சி மற்றும் உளவியல் காயங்களை உருவாக்குகின்றன. சமாதான வட்டம், இந்தக் காயங்களை குணப்படுத்துவதை மையமாகக் கொண்டது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்கள் வலியை வெளிப்படுத்தவும், குற்றவாளிகளுக்கு தங்கள் செயல்களின் விளைவுகளைப் புரிந்துகொள்ளவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

சமூகப் பிணைப்புகளை வலுப்படுத்துதல் (Strengthening Social Bonds) – மோதல்கள் சமூகங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்துகின்றன. சமாதான வட்டம், மோதலில் ஈடுபட்ட தனிநபர்களை மட்டும் அல்லாமல், சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றிணைத்து, மோதலால் ஏற்பட்ட விரிசல்களை சரிசெய்ய உதவுகிறது.

பொறுப்புணர்வை ஊக்குவித்தல் (Fostering Accountability) – இந்த முறை, குற்றவாளிகளை தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்கச் செய்கிறது, ஆனால் அது பழிவாங்கும் நோக்கத்தில் அல்ல. மாறாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை ஈடுசெய்யவும், சமூகத்துக்கு மீண்டும் பங்களிக்கவும் அவர்களை ஊக்குவிக்கிறது.

பண்பாட்டுப் பொருத்தப்பாடு (Cultural Relevance)– இலங்கை போன்ற பலதரப்பட்ட கலாச்சாரங்களைக் கொண்ட நாடுகளில், ஒவ்வொரு சமூகத்தின் பாரம்பரிய மதிப்புகளையும், சடங்குகளையும் உள்வாங்கும் ஒரு மோதல் தீர்வு முறை, மக்களால் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படும். சமாதான வட்டம், அத்தகைய ஒரு நெகிழ்வான மற்றும் உள்ளடக்கிய அணுகுமுறையை வழங்குகிறது.

### சமாதான வட்டத்தின் அறிவியல் விளைவுகள்

செவ்விந்தியர்களின் சமாதான வட்டம் போன்ற மோதல் தீர்வு முறைகள், அறிவியல் ரீதியாகப் புரிந்து கொள்ளக் கூடிய பல உளவியல் மற்றும் சமூக விளைவுகளைக் கொண்டுள்ளன. இவை வெறும் பாரம்பரிய நடைமுறைகள் மட்டுமல்ல, மனித நடத்தையியல் மற்றும் சமூக உளவியலின் அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் பயனுள்ளவையாக இருக்கின்றன.

தொடர்ச்சி▼

# யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவரும் வன்முறையற்ற ஆயுதம்!

தொடர்ச்சி▼

மூளையின் செயல்பாடு மற்றும் மன அழுத்தம் குறைதல் – மோதலில் ஈடுபடும்போது, நமது மூளையின் பயத்தையும் கோபத்தையும் கட்டுப்படுத்தும் பகுதியை அதிகப்படியாகத் தூண்டப்படுகிறது. இது மன அழுத்த ஹார்மோன்களான கார்டிசோல் மற்றும் அட்ரினலின் வெளியீட்டை அதிகரிக்கிறது. சமாதான வட்டம், பாதுகாப்பான மற்றும் அமைதியான சூழலை உருவாக்குவதன் மூலம் இந்த மன அழுத்த பதிலைக் குறைக்கிறது. பேசும் பொருள் கைமாறும்போது, ஒருவர் அமைதியாகக் கேட்க வேண்டியிருப்பதால், மூளை தற்காப்பு நிலையில் இருந்து விலகி, பகுத்தறிவுடன் சிந்திக்கும் திறனை (prefrontal cortex) பயன்படுத்தத் தொடங்குகிறது. இது மன அழுத்தத்தைக் குறைத்து, ஆரோக்கியமான உரையாடலுக்கு வழிவகுக்கிறது.

பச்சாதாபம் மற்றும் கண்ணோட்டத்தை அறிதல் – சமாதான வட்டத்தின் முக்கிய அம்சம், ஒவ்வொருவரின் கதையையும் குறுக்கீடு இல்லாமல் கேட்பதாகும். இது மற்றவர்களின் கண்ணோட்டத்தில் இருந்து விடயங் களைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்த செயல்முறை, மூளையின் கண்ணாடி நியூரான்களை (mirror neurons) தூண்டுகிறது. இந்த நியூரான்கள், மற்றவர்களின் உணர்வுகளையும் செயல்களையும் பிரதிபலிப்பதன் மூலம் பச்சாதாபத்தை வளர்க்கின்றன. மோதலின் போது எதிரியாகக் கருதப்படும் ஒருவரின் கதையைக் கேட்கும்போது, அந்த தனிநபரின் வலியைப் புரிந்து கொள்வது எளிதாகிறது. இது மோதலின் ஆழமான காரணங்களை அணுகி, உண்மையான தீர்வை எட்ட உதவுகிறது.

சமூகப் பிணைப்புகள் மற்றும் கூட்டுப் பொறுப்பு – மனிதர்கள் சமூக விலங்குகள். நமது நல்வாழ்வு பெரும்பாலும் சமூகப் பிணைப்புகளைச் சார்ந்துள்ளது. மோதல்கள் இந்தப் பிணைப்புகளைச் சேதப்படுத்தும். சமாதான வட்டம், மோதலை தனிநபர் பிரச்சினையாகப் பார்க்காமல், ஒட்டுமொத்த சமூகத்தின் பிரச்சினையாக அணுகுகிறது. இது சமூகத்தின் கூட்டு உணர்வை (உழடடநஉவளைந ளைநவெவைல) வலுப்படுத்துகிறது. ஒரு மோதலுக்கு சமூகம் கூட்டாகத் தீர்வு காண முயற்சிக் கும்போது, ஆக்ஸிடோசின் போன்ற “பிணைப்பு” ஹார் மோன்கள் வெளியாகி, நம்பிக்கையையும் ஒத்துழைப் பையும் வளர்க்கின்றன. இது மீண்டும் எதிர்காலத்தில் இதுபோன்ற மோதல்கள் ஏற்படாமல் தடுக்க உதவுகிறது.

இவ்வாறு சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள ஒரு தளத்தில் ஏற்படும் முரண்பாடுகள் தொடங்கி ஒரு தேசம், சர்வதேசம் என்ற ரீதியில் வளர்க்கப்படும் முரண்பாடுகளை சாதகமான முறையில் மாற்றிக்கொள்ள இந்த முரண்பாட்டு தீர்வு வட்டமானது மிகவும் சிறந்த முரண்பாட்டு தீர்வாகும். இன்று உலகில் எத்தனையோ உயிர்களினை காவுக்கொள்ளும் வன்முறையை தவிர்த்து உலக நாடுகளின் தலைவர்களை இவ்வாறான சமாதான தீர்வு முறைகளுக்கு உட்படுத்துவதன் வாயிலாக ஒரு நேர்மறைத் தீர்வை நோக்கி நகரலாம்.

**மு.நிமியா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# திருமலை கப்பல்துறை கிராமத்தில் அலுவலகங்கள் திறந்து வைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

கப்பல்துறை கிராமத்தில், இன்று (08) விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உப அலுவலகம், விவசாய போதனாசிரியர் அலுவலகம் மற்றும் கப்பல்துறை கமக்கார அமைப்பிற்கான காரியாலயம் என்பன, திருகோணமலை உப்புவெளி கமநல சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டன.

இந்த அலுவலகங்கள் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் என்.விஷ்ணுதாசன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஐ.எல். பௌசூல் அமீன், உப்புவெளி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்ஷானந்தன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.




முத்துநகர் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி நிலையம் என்பது விளாங்குளம், முத்துநகர் கப்பல்துறை கிராமங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இங்கு இருக்கின்ற விவசாயிகள் தங்களுக்கான சேவையை பெற்றுக் கொள்ள உப்புவெளியில் உள்ள அலுவலகத்துக்கு வருகின்ற போது போக்குவரத்துக்காக பெருமளவான நிதியைச் செலவு செய்ய வேண்டியுள்ளது.

எனவே அவர்களுடைய இலகுபடுத்தல்களுக்காக கப்பல்துறை கிராமத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உப அலுவலகம், விவசாய போதனாசிரியர் அலுவலகம் மற்றும் கப்பல்துறை கமக்கார அமைப்பிற்கான காரியாலயம் என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பெரும்போக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடன் அடிப்படையில் விதை நெல் வழங்கிவருவதாகவும், அதற்கான விற்பனை நிலையத்தையும் இன்றைய தினம் திறந்து வைத்திருப்பதாகவும், உப்புவெளி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்ஷானந்தன் கூறினார்.





### அட்டாளைச்சேனை - புறத்தோட்டம் கிராமத்துக்குள் புகுந்து

# காட்டு யானைகள் அட்டகாசம்! 33 தென்னை மரங்கள் நாசாம்!!

(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சபை அமைந்துள்ள புறத்தோட்டம் பகுதியில் இன்று அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் பயன்தரக்கூடிய 33 தென்னை மரங்களை அழித்து நாசப்படுத்தியுள்ளன.

அதிகாலை 2 மணியளவில் புறத்தோட்டம் பகுதிக்குள் மூன்று காட்டு யானைகள் உட்புகுந்து ஏ.ஆர். உபைதுல்லா என்பவரின் காணியில் பராமரிக்கப்பட்டு வந்த சுமார் 33 பயன்தரும் தென்னை மரங்களை அழித்து நாசப்படுத்தியுள்ளன.

மேலும், குறிப்பிட்ட இந்த மூன்று காட்டு யானைகளும், இந்தப் பகுதியிலுள்ள வீடுகளுக்குச் செல்ல முற்பட்ட போதிலும் மக்கள் வீதிகளுக்கு வந்து சத்த வெடில் சுட்டு யானைகளை விரட்டியுள்ளனர். இதன் மூலம் இன்னும் பாரிய அழிவுகள் தடுக்கப்பட்டுள்ளன என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை அமைந்துள்ள புறத்தோட்டம் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது எனவும், இதற்குப் பிரதான காரணம் பிரதேச சபையின் அருகில் உள்ள தனியார் காணியொன்றில் பிரதேச சபையால் தொடர்ச்சியாகக் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதேயாகும் எனப் பாதிக்கப்பட்ட தென்னம் தோட்ட உரிமையாளர் கவலையுடன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேலும், எல்லைப் பகுதியில் யானை வேலிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் நீண்ட காலமாக முன்வைத்துள்ள போதிலும், இதுவரை யானை வேலிகள் அமைப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

எனவே, புறத்தோட்டம் கிராமத்துக்குள் காட்டு யானைகள் உட்புகுந்து மக்களின் உடமைகளையும், பயிர்களையும், தென்னை மரங்களையும் அழித்துச் சேதப்படுத்துவதை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் தடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.









# விஜய் விரைவில் கரூர் வருகிறார்: த.வெ.க. நிர்வாகி அருண் தகவல்




"கரூரில் பாதிக்கப்பட்டவர்களை விரைவில் விஜய் நேரில் வந்து சந்திக்க உள்ளார். இது தொடர்பாக டி.ஜி.பி. அலுவலகத்துக்கு அனுமதி கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது."

- இவ்வாறு தமிழக வெற்றி கழகத்தைச் சேர்ந்த கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் முன்னாள் ஐ.ஆர்.எஸ். அதிகாரி அருண் ராஜ் கரூரில் தெரிவித்துள்ளார்.

கரூர், வேலுச்சாமிபுரம் பகுதியில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் உறவினர்களிடம் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த 2 நாள்களாக காணொலி அழைப்பு மூலமாக பேசி ஆறுதல் தெரிவித்து வருகிறார். குறிப்பாக கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்களிடம் பேசி முடித்துள்ளார்.

இந்த காணொலி அழைப்பில் பேசும் போது, பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளுக்கு தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த கொள்கை பரப்பு பொதுச்செயலாளரும், முன்னாள் ஐ.ஆர்.எஸ். அதிகாரியுமான அருண்ராஜ், கரூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணி உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்துள்ளனர். இது தொடர்பாக கரூரில் அருண்ராஜ் பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

"கரூரைச் சேர்ந்த 33 நபர்களின் உறவினர்களிடம் எங்கள் கட்சித் தலைவர் காணொலி அழைப்பு மூலமாக பேசி ஆறுதல் தெரிவித்துள்ளார். அவர் பேசும் போது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நீங்கள் தைரியமாக இருங்கள். தொடர்ந்து போராடுங்கள். என்று அவருக்கு ஆறுதல் கூறினர். பாதிக்கப்பட்டவர்களைவிரைவில் விஜய் நேரில் வந்து சந்திக்க உள்ளார்.

இது தொடர்பாக டி.ஜி.பி. அலுவலகத்துக்கு இமெயில் மூலமாக அனுமதி கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இன்று டி.ஜி.பி. அலுவலகத்துக்கு நேரில் சென்று அனுமதி கேட்க இருக்கிறோம். அரசு நடவடிக்கைகளுக்கு இப்போது கருத்து சொல்ல விரும்பவில்லை."- என்றார்.

---

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமியுடன் பா.ஜ.கவின் தேர்தல் பொறுப்பாளர் ஆலோசனை

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமியை பாஜக தேர்தல் பொறுப்பாளர் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார். இந்த சந்திப்பின் போது பா.ஜ.கவுக்கு கொங்கு மண்டலத்தில் அதிக தொகுதிகளை ஒதுக்க கோரிகை விடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கு அரசியல் கட்சியினர் தீவிரமாக தயாராகி வருகின்றனர். பிரச்சாரங்கள், மக்கள் சந்திப்பு, பூத் கொமிட்டி ஆலோசனை என பல கட்சிகளும் தேர்தலை நோக்கி பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி உறுதியானது. தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமை வகிப்பார் என அமித்ஷா அறிவித்தார். ஏற்கெனவே தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்த ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி. தினகரன் ஆகியோர் கூட்டணியில் இருந்து வெளியேறினர். அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த தே.மு.தி.கவும் மாநிலங்களவை ஆசனம் வழங்காததால் கூட்டணியில் இருந்து விலகியது. மேலும் பா.ம.கவில் உட்கட்சி பிரச்சினை காரணமாக நிலையற்ற தன்மை உள்ளது.

தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை பலப்படுத்தும் பணிகளை பா.ஜ.க. தொடங்கியுள்ளது. கடந்த சில



நாள்களுக்கு முன் தமிழக தேர்தல் மேலிட பொறுப்பாளராக பைஜெயந்த் பாண்டா, இணை பொறுப்பாளர் முரளிதர் மொஹோல் ஆகியோரை பா.ஜ.க. நியமனம் செய்தது. பைஜெயந்த் பாண்டா இதற்கு முன் 2021 ஆம் ஆண்டு நடந்த அசாம் சட்டப்பேரவை தேர்தல், கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற டில்லி சட்டப்பேரவை தேர்தல்களில் பா.ஜ.க. சார்பில் மேலிட பொறுப்பாளராக பணியாற்றிவர். இந்த இரண்டு தேர்தல்களிலும் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றது. தமிழகத்திலும் வெற்றி வாய்ப்பை அதிகரிக்க இவரை தேர்தல் பொறுப்பாளராக பா.ஜ.க. நியமித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் சென்னை வந்த தேர்தல் பொறுப்பாளர் பைஜெயந்த் பாண்டா, மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டர். நேற்று சென்னை பசுமை வழிச்சாலையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியை பைஜெயந்த் பாண்டா மற்றும் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்த சந்திப்பின் போது தேசிய ஜனநாயக கூட்டணியில் இன்னும் பல கட்சிகளை இணைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும் 2021 தேர்தலில் 20 இடங்களில் பா.ஜ.க. போட்டியிட்ட நிலையில் வரும் தேர்தலில் அதிக ஆசனங்களை கேட்டுள்ளதாகவும், குறிப்பாக கடந்த மக்களவை தேர்தலின் போது பா.ஜ.க. அதிக வாக்குகள் பெற்ற தொகுதிகள் மற்றும் கொங்கு மண்டலத்தில் அதிக தொகுதிகள் ஒதுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



# இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

இஸ்ரேல் அரசு, ஹமாஸ் குழுவினர் இடையே எகிப்தில் அமைதிப் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. இந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இஸ்ரேல் இராணுவம் மற்றும் காசாவின் ஹமாஸ் குழுவினர் இடையே கடந்த 2 ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது. இந்த போருக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 20 அம்ச திட்டத்தை முன்மொழிந்துள்ளார். போரினால் பாதிக்கப்பட்டுள்ள காசா மீண்டும் கட்டி எழுப்பப்படும். அந்த பகுதியில் இருந்து தீவிரவாதம் அகற்றப்படும். ஹமாஸ் குழுவின் பிடியில் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். உயிரிழந்தவர்களின் உடல்களை ஒப்படைக்க வேண்டும். போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்ட பிறகு காசாவில் இருந்து இஸ்ரேல் இராணுவம் படிப்படியாக வெளியேறும்.

ஹமாஸ் குழுவினர் ஆயுதங்களை கைவிட வேண்டும். அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும். காசாவில் இருந்து அவர்கள் பாதுகாப்பாக வெளிநாடுகளில் குடியேறலாம். காசாவை நிர்வகிக்க உள்ளூர் தலைவர்கள் அடங்கிய புதிய குழு அமைக்கப்படும். இந்த குழுவில் ஹமாஸ் தலைவர்களுக்கு இடம் கிடையாது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் உள்ளிட்டோர் அடங்கிய சர்வதேச குழுவின் வழிகாட்டுதலின்படி புதிய குழு காசாவை நிர்வகிக்கும். காசாவில் சிறப்பு பொருளாதார மண்டலம் உருவாக்கப்படும். சர்வதேச முதலீடு அதிகரிக்கப்படும். வேலைவாய்ப்புகள் பெருக்கப்படும். ஐ.எஸ்.எப். என்ற சர்வதேச படை காசாவில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ளும் என்பன உள்ளிட்ட திட்டத்தை ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக எகிப்தின் ஷர்ம் எல் ஷேக் நகரில் இஸ்ரேல் அரசு, ஹமாஸ் குழுவினர் இடையே நேற்று முன்தினம் அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது. இஸ்ரேல் அரசின் மூத்த அமைச்சர் ரோன் டெர்மர் தலைமையிலான குழு, ஹமாஸ் மூத்த தலைவர் காலில் அல் ஹையா தலைமையிலான குழு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இரு தரப்புக்கும் இடையே 2 ஆவது நாளாக நேற்றும் பேச்சுவார்த்தை நீடித்தது. அமெரிக்காவின் சிறப்பு தூதர் விட்காப் மற்றும் அதிபர் ட்ரம்பின் மருமகன் ஜெராட் குஷ்னர் ஆகியோர் இன்றைய பேச்சு வார்த்தையில் பங்கேற்க உள்ளனர். அப்போது முக்கிய உடன்பாடு எட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்க அரசு வட்டாரங்கள் கூறும்போது,

“இஸ்ரேல் அரசு, ஹமாஸ் குழுவினர் இடையிலான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஹமாஸ் பிடியில் உள்ள இஸ்ரேல் பிணைக்கைதிகளை விடுதலை செய்து, உயிரிழந்தவர்களின் உடல்களை ஒப்படைத்துவிட்டால் உடனடியாக போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்.” என்று தெரிவித்தன.

# ட்ரம்பின் போர் நிறுத்த திட்டத்தில் பல அபாயங்கள் நிறைந்துள்ளன

## ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் குற்றச்சாட்டு

காசாவில், போர் நிறுத்தத்திற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்வைத்த திட்டத்தில், பல அபாயங்கள் நிறைந்துள்ளன என லெபனானின் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நயீம் காசிம் குற்றம் சாட்டியுள்ளார்.

போரில் அடைய முடியாததை, அரசியல் ரீதியாக இந்த ஒப்பந்தம் மூலம் இஸ்ரேல் அடைய முயல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இது பலஸ்தீனியர்களின் நிலத்தைக் கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஜோர்தான், லெபனான், சிரியா போன்ற நாடுகளின் பகுதிகளை உள்ளடக்கிய ‘கிரேட்டர் இஸ்ரேல்’ திட்டத்தை அனைவரும் எதிர்க்க வேண்டும் என்றும் நயீம் காசிம் வலியுறுத்தியுள்ளார்.

ஒப்பந்தத்தை ஏற்பதா? வேண்டாமா? என்ற இறுதி முடிவு ஹமாஸின் கையில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ட்ரம்ப்பின் திட்டத்தின்படி, இஸ்ரேல் பணயக் கைதிகளை விடுக்க ஹமாஸ் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், ஹிஸ்புல்லாவின் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், ஒப்பந்தத்தில் உள்ள ஆயுதங்களைக் கைவிடுதல், காசா நிர்வாகத்தில் இருந்து விலகுதல் ஆகியவற்றை ஹமாஸ் ஏற்குமா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

கனடா முரசு
புதன்கிழமை | 08/10/2025

### வாகனங்களை சேதப்படுத்திய 3 பேர் வின்ட்சர் நகரில் கைது

கனடாவின் வின்ட்சர் நகரில் பல வாகனங்கள் சேதப்படுத்தப்பட்ட சம்பவங்களின் அடிப்படையில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியான 02



# அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்பை பிரதமர் மார்க் கார்னி சந்தித்தார்

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் ஓவல் அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**

**அமெரிக்காவிற்கு ட்ரம்பின் அழைப்பின் பேரில், கனடா பிரதமர் மார்க் கார்னி சென்று இருந்தார். வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்த போது கனடா பிரதமர் மார்க் கார்னியை கை குலுக்கி அவர் வரவேற்றார்.**

அப்போது கனடா பிரதமர், ட்ரம்ப் இடம் நகைச்சுவையாக பேசியுள்ளார். 'நான் உங்களுக்காக சிவப்பு நிறத்தில் டைய் அணிந்து உள்ளேன்" என மார்க் கார்னி கூறும் காணொலி வெளியாகி உள்ளது.

சந்திப்பின் போது, ட்ரம்ப் கார்னியுடன் நட்புரீதியான தொனியில் பேசியுள்ளார் . ஏப்ரல் மாதம் பதவியேற்றதிலிருந்து வெள்ளை மாளிகைக்கு இரண்டாவது முறையாக மார்க் கார்னி சென்றுள்ளார்.

ஏற்கனவே சிறந்த தலைவர் என கார்னியை ட்ரம்ப் பலமுறை பாராட்டினார். ஜனாதிபதி ட்ரம்ப், மார்க் கார்னி ஆகிய இருவரும் இரு நாட்டு உறவை வலுப்படுத்துவது தொடர்பிலும், அமெரிக்க அரசு நிர்வாக முடக்கம் மற்றும் இஸ்ரேல்-காசா மோதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் விவாதித்துள்ளனர்.

# கனடாவில் வெளிநாட்டு தொழிலாளர் தற்காலிக வீசாவுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கையில் பாரியளவு வீழ்ச்சி

கனடாவில் வெளிநாட்டு தொழிலாளர் தற்காலிக வீசா அனுமதி விண்ணப்பங்களில் பாரியளவு வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடா அரசின் புதிய கட்டுப்பாடுகள் அமலுக்கு வந்ததிலிருந்து, தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் (Temporary Foreign Worker) அனுமதி விண்ணப்பங்கள் 50 வீதம் வரை குறைந்துள்ளதாக கனடிய தொழில்வாய்ப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனம் Employment and Social Development Canada (ESDC) தெரிவித்துள்ளது.

02






# இஸ்ரேல் மீது ஹமாஸின் தாக்குதலுக்கு கனடா பிரதமர் மார்க் கார்னி கண்டனம்

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் மேற்கொண்ட தாக்குதலை கனடா பிரதமர் மார்க் கார்னி கண்டித்துள்ளார்.

கடந்த 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, ஹமாஸ் மற்றும் யூத விரோத மனப்போக்குகளை, மார்க் கார்னி கடுமையாகக் கண்டித்தார்.

உலகம் முழுவதும் உள்ள யூதர்கள், குறிப்பாக கனடாவில் வாழும் யூதர்கள், இன்னும் ஆழ்ந்த துயரம் மற்றும் அச்சத்துடன் வாழ்கின்றனர் என தனது அறிக்கையில் கார்னி குறிப்பிட்டுள்ளார்.

இன்றும் தினந்தோறும், அந்த தாக்குதலில் உயிரிழந்தவர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடன் நாங்கள் ஒருமித்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் தலைமையிலான ஆயிரக்கணக்கான போராளிகள் தென் இஸ்ரேலில் திடீர் தாக்குதல் நடத்தி சுமார் 1,200 பேரைக் கொன்று, 251 பேரை கடத்திச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் மேற்கொண்ட கடும் இராணுவ நடவடிக்கைகள் காசா பகுதியை பெருமளவில் சிதைத்து, ஹமாஸ் நிர்வகிக்கும் சுகாதார அமைச்சகத்தின் தகவலின்படி 67,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

தற்போது காசாவில் உள்ள 48 பணயக் கைதிகளில் 20 பேர் மட்டுமே உயிருடன் உள்ளனர் என நம்பப்படுகிறது.

அன்று கொடூரமாகக் கொல்லப்பட்ட அனைவரையும், கனேடியர்களான விவியன் சில்வர், நெட்டா எப்ஸ்டீன், அலெக்சாண்டர் லூக், ஜூடித் வைன்ஸ்டீன், ஷிர் ஜியோர்ஜி, பென் மிஸ்ராசி மற்றும் ஆடி வைட்டல்-கப்லூன் ஆகியோரையும் நாம் நினைவுகூருகிறோம் என பிரதமர் கார்னி தெரிவித்துள்ளார்.

அவர்களின் நினைவுகள் ஆசீர்வாதமாக இருக்கட்டும் எனவும் கார்னி குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ், இஸ்ரேல் பொதுமக்களுக்கு எதிராக அருவருப்பான தாக்குதலை நடத்திய தீவிரவாத அமைப்பு என்றும் கார்னி குறிப்பிட்டுள்ளார்.

## வாகனங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன சேதப்படுத்தல் மற்றும் அபகரிப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செப்டம்பர் 9 முதல் ஒக்டோபர் 1 வரை நான்கு வெவ்வேறு திகதிகளில், நகரம் முழுவதும் 70க்கும் மேற்பட்ட நிறுத்தப்பட்ட வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பல வாகனங்களில் இருந்த பொருள்களும் திருடப்பட்டன என மேலும் தெரிவிக்கப்பட்டள்ளது.

ஒரு சம்பவத்தில் திருடப்பட்ட கடன் அட்டையைப் பயன்படுத்தி பல முறை கொள்முதல்கள் செய்யப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய 19 வயதுடைய இரு இளைஞர்கள் வின்ட்சர் பொலிஸாரிடம் தாங்களாகவே சரணடைந்தனர்.



மறுநாள் 18 வயதுடைய மற்றுமொரு இளைஞர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில் , குற்றச்சாட்டாளர்கள்மீது மொத்தம் 126 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக வின்ட்சர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வீழ்ச்சியானது 2024 செப்டம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிமுறைகளுக்குப் பின்னர் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

அந்த விதிமுறைகள், தொழிலாளர் அனுமதியைப் பெறுவதைக் கடினமாக்கி, கனடியப் பணியாளர்களுக்கான வேலைவாய்ப்புகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த விதிமுறைகளை மீறிய நிறுவனங்களிடமிருந்து மொத்தம் 4.9 மில்லியன் கனேடிய டொலர் அபராதம் வசூலித்துள்ளதாக கனடிய தொழில்வாய்ப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதில் இத்திட்டத்தின் வரலாற்றிலேயே மிகப்பெரிய அபராதம் அடங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

நியு பிரவுன்ஸ்விக் மாகாணத்தின் பெலேரோ ஷெல்பிஷ் ப்ரோசேசிங் நிறுவனம் மீது 1 மில்லியன் டொலர் அபராதம் விதிக்கப்பட்டதுடன், 10 ஆண்டுகளுக்கு தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்திலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது.







# அல்பெர்டாவில் தொடரும் ஆசிரியர் வேலைநிறுத்தம்

கனடாவின் அல்பெர்டா மாகாண ஆசிரியர்கள் மாகாணமெங்கும் நடத்தும் வேலைநிறுத்தம் மூன்றாவது நாளை எட்டியுள்ள நிலையில், இது மாகாணத்தின் தொழிற்சங்க போராட்ட வரலாற்றில் மிகப்பெரிய ஒன்றாகப் பதிவாகி வருவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

51,000 உறுப்பினர்களைக் கொண்ட அல்பெர்டா ஆசிரியர் சங்கம் முன்னெடுத்து வரும் இந்த வேலைநிறுத்தம், இதுவரை மாகாணத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய தொழிலாளர் போராட்டமாகும் என அத்தபாஸ்கா பல்கலைக் கழகத்தின் தொழிலாளர் உறவுகள் பேராசிரியர் ஜேசன் ஃபாஸ்டர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக 2002 ஆம் ஆண்டு ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபோது, அதில் கலந்து கொண்டவர்கள் 21,000 பேர் மட்டுமே என அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய வேலைநிறுத்தம் பாடசாலைகளில் கற்கும் சுமார் 7 லட்சத்து 40 ஆயிரம் மாணவர்களை பாதித்துள்ளது.

இந்தப் போராட்டம் சம்பள உயர்வு மற்றும் பணியிட நிபந்தனைகள் குறித்த கருத்து வேறுபாடுகளை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




















